## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தென்காசி

முன்னிலை : திருமதி. P.சர்மிளா, பி.பி.ஏ.,பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, தென்காசி

**2021ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 09-ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**அசல் வழக்கு எண்.466/15**

வெள்ளைய நாடார்

(வழக்கர் தனது சிறப்பு அதிகாரம் பெற்ற

பவர் ஏஜெண்ட் முருகன் மூலம்) - வாதி

/எதிர்/

பூசத்துரை - பிரதிவாதி

இவ்வழக்கானது இறுதியான விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்த போது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.R.K.பாண்டியராஜ் அவர்களும், பிரதிவாதி தரப்பில் திரு.N.மாரித்துரை அவர்களும் முன்னிலையாகி, வா.சா.1 ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட வேண்டிய நிலையில், பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் பிரதிவாதியிடமிருந்து எவ்வித தகவலும் இல்லை என்று குறிப்பாணை தாக்கல் செய்து அக்குறிப்பாணை பதிவு செய்யப்பட்டதன் அடிப்படையில், வழக்கினை மேல்நடத்துமாறு நீதிமன்றத்திலிருந்து பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பானது சரியான முகவரி இல்லை என்று திருப்பப்பட்டதன் அடிப்படையில், பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததினால் ஒருதலைபட்சமாக தீர்மானித்தும், வாதி தரப்பு சாட்சியம், சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

வழக்குத் தொகுப்புரை அட்டவணைச் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக்கோரியும், அதன் விளைவாக வழக்குத் தொகுப்புரை அட்டவணைச் சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதி வாதிக்கு நீதிமன்றம் குறிப்பிடும் ஒரு தேதிக்குள் வழங்கிட உத்தரவிடக்கோரியும், இவ்வழக்கு செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கானது வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 2. வழக்குரையின் சுருக்கம்

வழக்கு தொகுப்புரை கண்ட சொத்து ஆதியில் சாமி என்பவருக்கு சுரண்டை சார்பதிவக ஆவண எண்.2304/1951 மூலம் அனஞ்சி கரையாளர், மாடாமி கரையாளர் ஆகியோர்களுக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டது. அனஞ்சி கரையாளர், மாடாமி கரையாளர் ஆகிய இருவரும் சரியான பயனீட்டின் பேரில் 07.03.1964-ம் தேதியில் சுரண்டை சார்பதிவக ஆவண எண்.573/1964 மூலம் சுப்பிரமணிய நாடாருக்கு கிரையம் செய்து கொடுத்து அனுபவத்தையும் கொடுத்துவிட்டார்கள். சுப்பிரமணிய நாடார் மேற்படி கிரைய தேதி 07.03.1964 முதல் வழக்கு தொகுப்புரை சொத்தினை சுப்பிரமணியா நாடார் என்பவர் உரிமையாளர் நிலையில் தனது தனித்த சொத்தாக அனுபவம் செய்து வந்த நிலையில், சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பு தனது குமாரத்திகளான தேனம்மாள், அமராவதி, சின்னத்தாய், முத்துக்கனி ஆகியோர்களையும் ஒரே ஒரு ஆண் மகனான வழக்கரையும் தனது அடுத்த சட்டக்கால் வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார். சுப்பிரமணிய நாடார் தனது பெண் மக்களான தேனம்மாள், அமராவதி, சின்னத்தாய், முத்துக்கனி ஆகியோர்களுக்கு நல்ல முறையில் சீர் செய்து கொடுத்ததாலும், வாதியும் நல்ல முறையில் சகோதரிகளை கவனித்து வந்ததாலும், சுப்பிரமணிய நாடார் சொத்தில் தங்களுக்கு பங்கு ஏதும் வேண்டாம் என வாதிக்கு வாய்மொழியாக விட்டுகொடுத்துவிட்டனர். பின்பு வாதிக்கு வழக்கு தொகுப்புரை அட்டவணைச் சொத்தினை உரிமையாளர் நிலையில் தனித்த சொத்தாக அனுபவம் செய்து வந்தார். மேற்படி அட்டவணைச் சொத்தில்

பனை, மா, வேம்புமரம் வளர்த்து அனுபவம் செய்து வந்த வாதி, அதில் விறகு வெட்டி விற்பனை செய்தும் அனுபவம் செய்து வந்தார். இந்நிலையில், வாதி வெளியூரில் இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால், வழக்கு தொகுப்புரை சொத்தினை பொறுத்து சிறப்பு அதிகாரம் பெற்ற முகவரான முருகனுக்கு வழக்கு தொகுப்புரை அட்டவணைச் சொத்தினை பராமரிக்க வாதி அனுமதி அளித்திருந்தார். எனவே, வழக்கு தொகுப்புரை சொத்தினை பற்றிய முழுவிபரமும் அசல் வழக்கின் சிறப்பு அதிகாரம் பெற்ற முகவருக்கு நன்கு தெரியும். வழக்கு சொத்து மழை காலங்களில் மட்டும் பயிர் செய்யக்கூடிய வகையில் அமைந்த சொத்தாகும். கடந்த 19.09.2015 அன்று வழக்கு தொகுப்புரை சொத்தினை வாதியும், சிறப்பு அதிகார முகவரும் பார்வையிட சென்றபோது, பிரதிவாதி வழக்கு சொத்திலிருந்த மரங்களை வெட்ட முயற்சி செய்தார். அதனால் கடும் அதிர்ச்சி அடைந்த வாதி, பிரதிவாதியிடம் கேட்டபோது, பிரதிவாதி வழக்கு தொகுப்புரை சொத்து தனக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டது என்றும், வழக்கு தொகுப்புரை சொத்து தனக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டது என்றும், வழக்கு தொகுப்புரை சொத்திற்கு பிரதிவாதி பெயருக்கு வருவாய்த்துறை மூலம் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கூறினார். வாதி, பிரதிவாதியிடம் தனது உரிமை பற்றி எடுத்துக்கூறியும் பிரதிவாதி செவிமறுத்து வாதி வழக்கு சொத்திற்குள் வந்தால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று வழக்கு சொத்தில் அத்துமீறி சென்று உழுதுவிட்டார். வாதி பிரதிவாதி பற்றி காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததும் காவல்நிலையத்தில் பிரதிவாதிக்கு சாதகமாகவே நடந்து கொண்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வாதி கடந்த 02.10.2015 அன்று வழக்கு தபசில் சொத்துக்கான கணிணி பட்டா எடுத்ததில் பிரதிவாதி பெயருக்கு வருவாய்த்துறை ஆவணங்கள் ஏற்பட்டுள்ள விபரம் தெரியவந்தது. வாதியின் தகப்பனார் பெயரில் இருந்த வருவாய்த்துறை ஆவணங்கள் முறையான அறிவிப்பு எதுவுமின்றி பிரதிவாதி பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், வருவாய்த்துறை ஆவண மாற்றம் வாதியை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது. வழக்கு சொத்துக்கு

பிரதிவாதி பெயரில் கிரைய ஆவணங்கள் இருந்தாலும், வழக்கு சொத்துக்கான பட்டாவில் பிரதிவாதி பெயர் இருந்தாலும், வழக்கு சொத்தில் பிரதிவாதிக்கு எவ்வகையிலும் உரிமை ஏற்பட்டிருப்பதில்லை. பிரதிவாதி நினைத்ததை சாதிக்கும் ஆற்றல் படைத்தவர்கள். எனவே, வழக்குத் தொகுப்புரை அட்டவணைச் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்து, அதன் விளைவாக வழக்குத் தொகுப்புரை அட்டவணைச் சொத்தின் சுவாதீனத்தை எதிர்வழக்கர் வாதிக்கு நீதிமன்றம் குறிப்பிடும் ஒரு தேதிக்குள் வழங்கிட உத்தரவிடக்கோரியும், இவ்வழக்கு செலவுத்தொகை வழக்கருக்கு எதிர்வழக்கர் செலுத்திப் போகவும் தீர்ப்பாகக் கோரி வழக்கரால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. பிரதிவாதியின் எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**

வாதியின் வழக்கு உண்மையல்ல. வாதியின் வழக்கு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய். வழக்கு சொத்தானது வாதியின் தந்தைக்கு பாத்தியப்பட்டதுமில்லை, மேற்படியார் அனுபவிக்கவுமில்லை. மேற்படியார் வாரிசுகள் வாதியின் சொத்தில் பாகம் செய்திருப்பதுமில்லை. அவ்விதம் பாகம் செய்ய எந்த உரிமையும் பெற்றவர்கள் இல்லை. எந்த எந்த சொத்துக்களை எப்போது பாகம் செய்தார்கள் என்றோ, வாதிக்கு எந்த சொத்து ஒதுக்கப்பட்டது என்றோ குறிப்பிட்டு வழக்குரையில் கூறாததிலிருந்தே வழக்குச் சொத்து பாகப்பிரிவினை மூலம் வாதிக்கு கிடைத்தது என்பது உண்மையல்ல என்பது தெளிவாகிறது. வழக்குச் சொத்துக்கும் வாதிக்கும் எந்த தொடர்பும் கிடையாது. வழக்குரை சொத்து உட்பட வேறு சொத்துக்களையும், புல எண். 87/1சி-ல் அமைந்த அதன் பாசன கிணறு பாத்தியதை பாதி உரிமையையும், கே.பி.முகம்மது இஸ்மாயில் என்பவர் அதன் உரிமையாளரான சீனி என்ற சிவனு நாடார் என்பவரிடமிருந்து 10.10.1988 அன்று கிரையம் வாங்கி விவசாயம் செய்து அனுபவித்து வந்து, 14.12.1998 அன்று உரிய மறுபயனுக்கு இந்த

பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார். எஞ்சிய சொத்துக்களும் மேற்படி புல எண்.87/1சி-ல் அமைந்த அதன் பாசன கிணறு பாத்தியதை பாதி உரிமையும், கனிநாடார் என்ற பரமசிவன் என்பவருக்கு பூர்வீகமாக உரிமைப்பட்டு, அனுபவித்து வந்ததை மேற்படியார் வகையறாவிடமிருந்து **21.12.1998** அன்று இந்த பிரதிவாதி உரிய மறுபயனுக்கு கிரையம் பெற்று வழக்குரைச் சொத்து உட்பட மேற்படி தனது கிரைய சொத்துக்களுக்கு பிரதிவாதி தனது பெயருக்கு முறையாக பட்டா எண்.241 முதலியன பெற்றும், நாளது வரை நிலுவையின்றி நிலவரிகள் செலுத்தியும், மேற்படி கிணற்றிலிருந்து நீர் இறைத்து விவசாயம் செய்து அனுபவித்து வருகிறார். இந்த உண்மைகள் வாதியின் முகவரான முருகனுக்கு நன்கு தெரியும். வழக்குரை சொத்து உட்பிரிவு செய்யப்பட்டும், கிணற்று பாசனம் வசதி உள்ளதையும் கூட தெரியாமல் மானாவாரி நிலம் என்று வழக்குரையில் விவரித்திருப்பது மோசடி ஆகும். வழக்குரைச் சொத்து பிரதிவாதியின் முன் கிரையதாரர்களும், பிரதிவாதியும் சட்டப்படியான காலங்களுக்கு மேலாக அனைவருக்கும் தெரியும் வகையில், தொடர்ச்சியாக, எவ்வித எதிர்ப்புமின்றி, தங்கள் சொத்தாகவே நினைத்து, விவசாயம் செய்து, சர்க்கார் வரிகளை செலுத்தி, அனுபவித்து வருகிறார்கள். வாதி கட்சிப்படி பார்த்தாலும் வாதிக்கு எதிரில் இந்த பிரதிவாதிக்கு வழக்குரைச் சொத்தில் எதிரிடை அனுபவ உரிமையும் சட்டப்படி உள்ளது. வாதி குறிப்பிடும் முன் உரிமையாளர்களுக்கு வழக்குரைச் சொத்தில் எந்த உரிமையும் ஒருபோதும் கிடையாது. ஒருவேளை உரிமை இருந்திருந்தால் கூட அது இன்றைக்கு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னரே அழிந்து, ஒழிந்து, நசிந்து காலாவாதியாகிவிட்டது. ஆகவே வழக்குரைச் சொத்து இந்த பிரதிவாதிக்கு மட்டும் தனித்து உரிமைப்பட்டு மேற்படியாரின் தனித்த ஆளுகையிலும், அனுபவத்திலும் இருந்து வருகிறது. அதில் வாதிக்கு எந்த உரிமையும் கிடையாது. வழக்குரைச் சொத்தை பிரதிவாதியிடமிருந்து தட்டிப்பறிக்கவே இந்த வழக்கில் வாதி விளம்புகை மற்றும் ஆளுகை மீட்பு பரிகாரமும் கேட்டுள்ளது சட்டப்படி ஏற்கத்தக்கதும் அல்ல, இம்மன்றத்தில் அசல் வழக்கும் நிலைக்கத்தக்கது அல்ல. மேற்படி

வாதியின் அசல்வழக்கானது பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. மேற்கூறிய வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் பொருட்டு கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.

1 whether the plaintiff is entitled for declaration and recovery of possession as prayed for?

2 For what other relief and cost the parties are entitled?

5. வாதி தரப்பில் வா.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் 7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 3ஆம் தரப்பினரான சுடலைமாட நாடார் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு, அழைத்தும் ஆஜராகவில்லை. எனவே, அசல் வழக்கில் பிரதிவாதி தோன்றா தரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>6. எழுவினா 1 க்குரிய தீர்வு :-</u>**

வாதி தரப்பு கேட்கப்பட்டது. வாதி தரப்பு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வாதி தரப்பு வாதத்தை பொறுத்து, 18.10.1951-ம் தேதிய வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தை பரிசீலிக்கையில், அனஞ்சி கரையாளர், மாடாமி கரையாளர் ஆகியோர் செந்தில்குமார் தேவரிடமிருந்து வழக்கு தொகுப்புரை சர்வே எண்.89/1-ல் கண்ட சொத்தை கிரையம் பெற்றுள்ளதும், சர்வே எண். 89/1-ல் கண்ட செண்ட் 56-ம் மேற்படி கிரையத்திற்கு பிறகு

அடங்கலில் கண்டவாறு மேற்படியார்கள் பெயரில் உள்ளதை காட்டக்கூடிய வகையில் வா.சா.ஆ.3 தாக்கல் செய்துள்ளதும் தெரியவருகிறது.

7. மேலும், வா.சா.ஆ.4-ன் மூலமாக கடந்த 07.03.1964-ம் தேதியில் சுரண்டை சார்பதிவக ஆவண எண்.573/1964 மூலம் பிராது தபசில் சொத்தை அனஞ்சி கரையாளர், மாடாமி கரையாளர் ஆகிய இருவரும் சரியான பயனீட்டின் பேரில் வாதியின் தந்தையான சுப்பிரமணிய நாடாருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டதும் தெரியவருகிறது.

8. மேலும், மேற்படி வாதியின் தந்தைக்கு ஏற்பட்ட கிரையத்தை காட்டும் வகையில் வா.சா.ஆ.4 ஆன அசல் ஆவணத்தையும் அதற்கு ஆதரவாக சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

9. வழக்குச் சொத்துக்களில் வாதியின் தந்தையின் அனுபவத்தினை காட்டக்கூடிய வகையில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 ஆன செட்டில்மெண்ட் சிட்டாவை பரிசீலிக்கையில், மேற்படி வா.சா.ஆ.6-ல் சர்வே எண்.89/1-க்கு வாதியின் தந்தையான சுப்பிரமணிய நாடார் பெயரில் பட்டா எண்.255 ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது.

10. வா.சா.ஆ.7 ஐ பரிசீலிக்கையில் சர்வே எண்.89/1 ஆனது சர்வே எண்.89/1ஏ மற்றும் 89/1பி என்று உட்பிரிவு செய்யப்பட்டு, மேற்படி சர்வே எண்களுக்கு பிரதிவாதி பெயரில் பட்டா எண்.241 ஏற்பட்டுள்ளதும் தெரியவருகிறது.

11. மேற்படி வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.6 ஆவணங்களின் மூலம் வாதியின் கட்சிப்படி வழக்கு தொகுப்புரை கண்ட சொத்து ஆதியில் அனஞ்சி கரையாளர், மாடாமி கரையாளர் ஆகியோர்களுக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டு, மேற்படியாரிடமிருந்து 07.03.1964-ம் தேதியில் வாதியின் தந்தையான சுப்பிரமணிய நாடாருக்கு கிரையம் பெற்று, அவரது சட்டப்படியான உரிமையில் இருந்தது என்பதையும், மேற்படி கிரையத்தின் அடிப்படையில்

மேற்படி தபசில் சொத்தை சுப்பிரமணிய நாடார் அனுபவித்து, அவரது பெயருக்கு வா.சா.ஆ.6 சிட்டா ஏற்பட்டு சட்டப்படியான அனுபவமும் மேற்படியாருக்கு ஏற்பட்டுள்ளது என்பதையும், வாதி தரப்பு ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. மேலும், பிரதிவாதி தரப்பில் வழக்கு சொத்தானது வாதியின் தந்தைக்கு பாத்தியப்பட்டு, அவரது அனுபவத்தில் இல்லை என்றும், வாதிக்கு மேற்படி தபசில் சொத்து வாரிசு அடிப்படையில் எவ்வாறு ஒதுக்கப்பட்டது என்பதை குறிப்பிட்டு கூறவில்லை என்றும், வழக்குச் சொத்துக்கும் வாதிக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றும், வழக்குரை சொத்து உட்பட வேறு சொத்துக்களையும், புல எண். 87/1சி-ல் அமைந்த அதன் பாசன கிணறு பாத்தியதை பாதி உரிமையையும், கே.பி.முகம்மது இஸ்மாயில் என்பவர் அதன் உரிமையாளரான சீனி என்ற சிவனு நாடார் என்பவரிடமிருந்து 10.10.1988 அன்று கிரையம் வாங்கி விவசாயம் செய்து அனுபவித்து வந்து, 14.12.1998 அன்று உரிய மறுபயனுக்கு இந்த பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றும், எஞ்சிய சொத்துக்களும் மேற்படி புல எண்.87/1சி-ல் அமைந்த அதன் பாசன கிணறு பாத்தியதை பாதி உரிமையும், கனிநாடார் என்ற பரமசிவன் என்பவருக்கு பூர்வீகமாக உரிமைப்பட்டு, அனுபவித்து வந்ததை மேற்படியார் வகையறாவிடமிருந்து 21.12.1998 அன்று இந்த பிரதிவாதி உரிய மறுபயனுக்கு கிரையம் பெற்று வழக்குரைச் சொத்து உட்பட மேற்படி தனது கிரைய சொத்துக்களுக்கு பிரதிவாதி தனது பெயருக்கு முறையாக பட்டா எண்.241 முதலியன பெற்றும், நாளது வரை நிலுவையின்றி நிலவரிகள் செலுத்தியும், மேற்படி கிணற்றிலிருந்து நீர் இறைத்து விவசாயம் செய்து அனுபவித்து வருகிறார் என்றும், இந்த உண்மைகள் வாதியின் முகவரான முருகனுக்கு நன்கு தெரியும் என்றும், வழக்குரை சொத்து உட்பிரிவு செய்யப்பட்டும், கிணற்று பாசனம் வசதி உள்ளதையும் கூட தெரியாமல் மானாவாரி நிலம் என்று வழக்குரையில் விவரித்திருப்பது மோசடியானது என்றும், வாதி குறிப்பிடும் முன் உரிமையாளர்களுக்கு வழக்குரைச் சொத்தில் எந்த உரிமையும் ஒருபோதும்

கிடையாது என்றும், ஒருவேளை உரிமை இருந்திருந்தால் கூட அது இன்றைக்கு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னரே அழிந்து, ஒழிந்து, நசிந்து காலாவாதியாகிவிட்டது என்றும், எனவே வாதிக்கு எதிரில் இந்த பிரதிவாதிக்கு வழக்குரைச் சொத்தில் எதிரிடை அனுபவ உரிமையும் சட்டப்படி உள்ளது என்றும், ஆகவே வழக்குரைச் சொத்து இந்த பிரதிவாதிக்கு மட்டும் தனித்து உரிமைப்பட்டு மேற்படியாரின் தனித்த ஆளுகையிலும், அனுபவத்திலும் இருந்து வருவதால், வாதிக்கு எந்த உரிமையும் கிடையாது என்றும், எனவே, இவ்வழக்கு சட்டப்படி ஏற்கத்தக்கதும் அல்ல என்பதால், அசல்வழக்கானது பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் மறுத்துரைக்கப்பட்டுள்ளது.

13. கடந்த 01.12.2020 அன்று கட்டாய விசாரணைக்காக எடுக்கப்பட்டு, வாதி தனது கட்சியை நிரூபிக்கும் விதமாக 15.12.2020-ல் ஆஜராகி, சாட்சியம் அளித்து, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்து 18.12.2020-லிருந்து 02.02.2021 வரை வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக பிரதிவாதிக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு, மேற்படி தேதியில் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் பிரதிவாதியிடமிருந்து எந்தவித தகவலும் இல்லை என்று குறிப்பாணை தாக்கல் செய்ததன் அடிப்படையில், 26.02.2021-ல் இந்நீதிமன்றமே தானாகவே முன்வந்து பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியதன் அடிப்படையில், பிரதிவாதியின் முகவரி தவறுதலாக உள்ளது என்று திருப்பப்பட்டு, மேற்கண்டவாறு, பிரதிவாதிக்கு வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்கு பல வாய்ப்புகள் வழங்கப்பட்டும், வா.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்ய பிரதிவாதியை அழைத்தும் ஆஜராகததால், பிரதிவாதி தோன்றாதரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ளனர். மேலும், பிரதிவாதி தனது கட்சியை நிரூபிக்கும் வகையில் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சியமளிக்கவில்லை என்பதும், பிரதிவாதி தரப்பில் யாதொரு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்பது தெளிவாகிறது.

14. மேலும், வா.சா.ஆ.7-ன் படி பிரதிவாதி பெயருக்கு தபசில் சொத்தைப் பொறுத்து, பட்டா ஏற்பட்டிருந்தாலும் பட்டா போன்ற வருவாய் ஆவணங்கள் ஒரு சொத்தில் ஒருவரின் சட்டப்படியான உரிமையையும், அனுபவத்தையும் தீர்மானிக்காது என்பதால், மேற்படி பட்டாவின் அடிப்படையில் பிரதிவாதிக்கும் தபசில் சொத்தில் எவ்வித அனுபவமும் உரிமையும் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. மேலும், வாதி தரப்பில் தனது வாதத்திற்கு வலு சேர்க்கும் விதமாக, வழக்கின் மூன்றாம் தரப்பினரான வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள சுடலைமாட நாடார் தனது சாட்சியத்தின் வழக்கு தொகுப்புரை சொத்தை வாதியின் தந்தையான சுப்பிரமணிய நாடார் தனித்து பாத்தியப்பட்டு அனுபவித்து வந்த நிலையில், சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு தனது குமாரத்திகளான தேனம்மாள், அமராவதி, சின்னத்தாய், முத்துக்கனி ஆகியோர்களையும் ஒரே ஒரு ஆண் மகனான வாதியையும் தனது அடுத்த சட்டக்கால் வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும், சுப்பிரமணிய நாடார் தனது பெண் மக்களான தேனம்மாள், அமராவதி, சின்னத்தாய், முத்துக்கனி ஆகியோர்களுக்கு நல்ல முறையில் சீர் செய்து கொடுத்ததாலும், வாதியும் நல்ல முறையில் சகோதரிகளை கவனித்து வந்ததாலும், சுப்பிரமணிய நாடார் சொத்தில் தங்களுக்கு பங்கு ஏதும் வேண்டாம் என வாதிக்கு வாய்மொழியாக விட்டுகொடுத்துவிட்டனர் என்றும், பின்பு வாதிக்கு வழக்கு தொகுப்புரை அட்டவணைச் சொத்தினை உரிமையாளர் நிலையில் தனித்த சொத்தாக தற்போது வரை வாதியே சட்டப்படியாக அனுபவம் செய்து வருகிறார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில், பிராது தபசில் சொத்தானது வாதியின் தந்தையான சுப்பிரமணிய நாடாருக்கு தனித்து பாத்தியப்பட்டு, அவரது

காலத்திற்கு பிறகு, அவரது மகனான வாதிக்கு வாய்மொழி பாகத்தின் மூலம் ஒதுக்கப்பட்டு, தற்போது வரை சட்டப்படியான அனுபவத்தில் உள்ளது என்பதை வாதி நிரூபித்துள்ளார் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**17.** எனவே, பிராது தபசில் சொத்தில் வாதிக்கு உள்ள சட்டப்படியான உரிமை மற்றும் சட்டப்படியான அனுபவம் வாதியால் நிரூபிக்கப்பட்டுள்ளதால் , பிராது தபசில் சொத்தைப் பொறுத்து வாதி இவ்வழக்கில் கோரியுள்ள விளம்புகை பரிகாரத்தினை பெற வாதி தகுதியுடையவர் என்றும், பிராது தபசில் சொத்து தற்போது வரை வாதியின் சட்டப்படியான அனுபவத்தில் உள்ள நிலையில், சுவாதீன மீட்பு பரிகாரத்தினை பெற வேண்டிய அவசியம் வாதிக்கு ஏற்படவில்லை என்பதால், இவ்வழக்கில் கோரியுள்ள சுவாதீன மீட்பு பரிகாரத்தினை பெற வாதி தகுதியுடையவர் அல்ல என்றும் எழுவினா 1-க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**18.** <u>எழுவினா-2 க்கான தீர்வு :-</u>

இதர பரிகாரம் வழங்கும் அளவில் வாதியோ, அல்லது பிரதிவாதியோ தங்களது வழக்கை வனைந்துகொள்ளவில்லை. எனவே, யாதொரு இதர பரிகாரங்களும் உபயவாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், இவ்வழக்கின் தன்மையைக் கருத்தில் கொண்டு அவரவர் செலவு தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்து, யாதொரு செலவுத்தொகையும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா-2-க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**19.** முடிவாக, இவ்வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, வழக்குத் தொகுப்புரை அட்டவணைச் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், வழக்குத் தொகுப்புரை அட்டவணைச் சொத்தைப் பொறுத்து வாதி கோரியுள்ள சுவாதீன மீட்பு பரிகாரத்தினைப் பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2021-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 9-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஒ/ம்.P.சர்மிளா)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி

**<u>வாதி தரப்பு சாட்சி</u>**

1. முருகன்
2. சுடலை மாட நாடார்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| 1 | 28.09.2015-ல் வெள்ளைய நாடார் எனக்கு எழுதிக்கொடுத்த பவர் ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.1. |
| 2 | 18.10.1951-ல் மாடசாமி கரையாளர் மற்றும் அனஞ்சி கரையாளர் ஆகியோர்கள் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் எஸ்.ஆர்.ஓ. நகல் |
| 3 | வழக்குச் சொத்திற்கான அ பதிவேடு உண்மை நகல் |
| 4 | 07.03.1964-ல் சுப்பிரமணிய நாடார் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் அசல் |
| 5 | 07.03.1964-ல் சுப்பிரமணிய நாடார் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் எஸ்.ஆர்.ஓ.நகல் |
| 6 | வழக்குச் சொத்திற்கான செட்டில்மெண்ட் சிட்டா |
| 7 | 02.10.2015-ல் வழக்குச் சொத்துக்கு பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டா |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:</u>** இல்லை.

(ஒ/ம்.P.சர்மிளா)
கூ.மா.உ.நீ.,
தென்காசி.

கூ.மா.உ.நீ.ம.தென்காசி
அசல் வழக்கு எண்.466/2015
நேரிய/வரைவு தீர்ப்புரை
09.04.2021